## முதலாம் தவணை மீட்டல் வினாக்கள்

( மாணவர்களின் சுய கற்றலுக்கானது )

### நாடகமும் அரங்கியலும்
### தரம் 10

**I சுருக்க விடைதருக**

01. நாடகம் என்றால் என்ன ?
02. நாடகத்தின் பண்புகள் 5 தருக?
03. நாடகத்தின் பிரதான மூலக்கூறுகள் எவை ?
04. ‘அரங்கு’ என்பதை விளக்குக ?
05. அரங்கின் மூலக்கூறுகள் 6 தருக?
06. இலக்கியம் என்றால் என்ன?
07. இலக்கிய வடிவங்கள் நான்கு தருக?
08. வானொலி நாடகத்தின் பிரதான இயல்பு யாது ?
09. வானொலி நாடகத்திற்கும் மேடைநாடகத்திற்குமான வேறுபாடுகளை எழுதுக?
10. இசையின் வகைகளைத் தருக ?
11. இசையை முதன்மையாகக் கொண்ட நாடக வடிவம் ஒன்று தருக?
12. தொலைக்காட்சி நாடகத்திற்கும் வானொலி நாடகத்திற்கும் இடையிலான ஒற்றுமைகள் தருக?
13. அசைவுகளின் வகைகளைத் தருக ?
14. மேடைநாடகத்தில் அசைவுகளின் பயன்பாடுகள் 5 தருக?
15. இயல்பான அசைவு, ஆக்கியல் அசைவு என்பவற்றுக்கிடையேயான 3 வேறுபாடுகளைத் தருக?
16. அரங்க விளையாட்டு என்றால் என்ன ?
17. அரங்க விளையாட்டின் நன்மைகள் 5 எழுதுக ?
18. கருத்துான்றல் பயிற்சியாக அமையும் அரங்க விளையாட்டு ஒன்று தருக ?
19. நடிப்பு நுட்பங்களில் ‘புதிதளித்தல்’ என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
20. புதிதளித்தலின் வகைகள் எவை ?
21. புதிதளித்தல் மூலமாக வளர்த்தெடுக்கப்படும் திறன்கள் எவை?
22. நடிகனுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் யாவை?
23. ‘சடங்கு’ என்றால் என்ன?
24. சடங்குகளில் காணப்படும் நாடகப் பண்புகள் சில தருக ?
25. வேட்டைத் திருவிழாவில் காணப்படும் நாடகப்பண்புகள் எவை?
26. குளிர்த்திச் சடங்கு எக்காலப்பகுதியில் நிகழ்த்தப்படும்?
27. ‘ரட்டயக்கும’ நிகழ்த்தப்படும் நோக்கம் யாது ?
28. ரட்டயக்குமவில் காணப்படுகின்ற நாடக பண்புகள் 3 தருக?
29. ஒயிலாட்டம் எவ்வாறு ஆடப்படும்?
30. ஒயிலாட்டத்தின் அரங்கக் கூறுகளை எழுதுக?
31. பறைமேளக் கூத்துக்கள் தற்போதும் நிகழ்த்தப்படும் பிரதேசம் யாது ?
32. பறைமேளக் கூத்தினை நடத்துவிக்கும் தலைவன் எப்பெயரில் அழைக்கப்படுவான்?
33. பறைமேளக் கூத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் எவை ?
34. பறைமேளக்கூத்தில் இசைக்கப்பெறும் தாளக்கோலங்கள் மூன்று தருக ?
35. சொக்கரி எக்காலப் பகுதியில் நிகழ்த்தப்படும் ?
36. சொக்கரியில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களைத் தருக?
37. சொக்கரி எத்தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது ?
38. சொக்கரியில் காணப்பெறும் நாடகச்செயல்கள் நான்கு தருக ?
39. உலக நாடக தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது.?
40. சர்வதேசீதியாக வெளிவருகின்ற நாடக அரங்கியலுக்கான சஞ்சிகை தருக?

**II விளக்கமான விடை தருக**

01 நாடகக்கலையின் சிறப்பியல்புகள் பற்றி விபரிக்குக ?

02. நாடகக்கலையில் இருந்து பின்வருவன எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனை தனித்தனியே சுருக்கமாக விளக்குக?

(அ) இசை (ஆ) நடனம் (இ) இலக்கியம் (ஈ) தொலைக்காட்சி நாடகம்

03. (அ) நாடகம் நடிப்பதற்காக நடிகர் ஒருவர் பெற்றிருக்கவேண்டிய பயிற்சிகள் யாவை ?
(ஆ) நீர் மேலை குறிப்பிட்ட பயிற்சிகளைப் பெற வேண்டியதற்கான காரணங்களையும் அப்பயிற்சிகள் நாடகத்திற்கு உதவும் விதத்தினையும் சுருக்கமாக விளக்குக?
(இ) நடிகர்களுக்கான குரல்பயிற்சி மேற்கொள்ளப்படும் ஒரு ஒழுங்கினை எழுதுக ?

04. **A.வேட்டைத் திருவிழா, B குளிர்த்தி, C ரட்டயக்கும** ஆகிய ஒவ்வொரு சடங்குகளிலும் காணப்படும் பின்வரும் அரங்கியல் பண்புகளை அட்டவணைப்படுத்தி எழுதுக?

(அ) நிகழ்த்தப்படும் நோக்கம்.

(ஆ) ஆற்றுகை வெளி

(இ) பாத்திரங்கள்

(ஈ) வேட உடை,ஒப்பனை

(உ) இசை/இசைக்கருவிகள்

(ஊ) ஆற்றுவோருக்கும் பக்தர்களுக்கும் இடையிலான ஊடாட்டம்

05. நடிகர்களுக்கான ‘உள ஒருமைப்பாட்டிற்கான பயிற்சிகள்’ நடிப்பிற்கும் சொந்த வாழ்வுக்கும் எவ்வாறு உதவலாம் என்பதனை உமது அனுபவத்தில் இருந்து எழுதுக?